## தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகக்கழகம்.

( சுருக்கம் )

படிகள் - பழைய ஊதிய விகிதத்தில் அகவிலைப்படி– 1-7-2010 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

(செயலகக் கிளை)

<u>(நிலையான) செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்.1 நாள் 1-11-2010.</u>

ஐப்பசி மாதம் – 15-ம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

<u>படிக்கப்பட்டது:</u>

1) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்.32, (செ.கி) நாள் 13-10-2009.
2) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை (தலைவர்) எண்:223 (செ.கி) நாள் 21-11-2009.
3) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை (தலைவர்) எண்:224 (செ.கி) நாள் 21-11-2009.
4) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்:34 (செ.கி) நாள் 4-10-2010.
5) (நிலையான) வாரிய செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்:14 (செ.கி) நாள் 15-6-2010.
6) அரசு ஆணை எண்: 383 நிதி (படிகள்) த் துறை. நாள் 1-10-2010.

--------

www.tnebes.org

<u>செயல்முறைகள்:-</u>

பார்வை 1-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரிய ஆணையில், வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01-07-2009 முதற்கொண்டு அகவிலைப்படியினை அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 73 சதவீதம் என்ற வீதத்தில் வழங்கிட ஆணையிடப்பட்டது.

<u>2.</u> பார்வை 4-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரிய ஆணையில் 1-12-2007 முதல் நடைமுறைபடுத்தப்பட்ட ஊதிய மாற்றத்தின் அடிப்படையில் புதிய ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 1-7-2010 முதற்கொண்டு திருத்தப்பட்ட அகவிலைப்படியை அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 35 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

<u>3.</u> பார்வை 5-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரிய ஆணையில், பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் பணியாளர்களுக்கு, 01-01-2010 முதல் அகவிலைப்படியை 73 சதவீதத்திலிருந்து 87 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

<u>4.</u> பார்வை 6-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் மாநில அரசு பணியாளர்களுக்கு 1-7-2010 முதல் அகவிலைப்படியை 87 சதவீதத்திலிருந்து 103 சதவீதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

5. மேற்காணும் அரசாணையைப் பின்பற்றி, பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் தமிழ் நாடு மின்சார வாரிய ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 01-07-2010 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 103 சதவீதம் |

6. மேற்காணும் உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியானது, பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் வாரியத்தின் தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஊதிய ஏற்றமுறையுடன் கூடிய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு (absorbed Part Time Sweepers / Scavengers in the time scale of pay) 1-7-2010 முதற்கொண்டு கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

7. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

www.tnebes.org

8. இந்த ஆணையைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

( வாரிய ஆணையின்படி )

இரா. மதிவாணன்
செயலாளர்.

பெறுநர்:
அனைத்துத் தலைமைப் பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் / (பொது) / (வருவாய்).
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்.
அனைத்து துணைச் செயலாளர்கள்/ செயலகக் கிளை.
தலைமை உட்தணிக்கை அலுவலர்.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக் கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்).
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

நகல்:
தலைவரின் பார்வைக்கு.
உறுப்பினர் (பகிர்மானம்).
உறுப்பினர் (உற்பத்தி).
செயலாளர் / தமிழ் நாடு மின்சார வாரியம்.
மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.